# பொதுமை


நீ! உயிரிழப்பதைத்தான்
அவர்கள், தியாகம் என்று
சொல்லித் திரிகிறார்கள்.
நீ! எப்போது
முழு வலிமையோடு நிமிர்ந்தெழுந்து
அவர்கள் முகத்திலறைந்தாற்போல
இந்தக் கேள்வியைக் கேட்கப்போகிறாய்?
ஏன் நாங்கள்
போரிட்டுக்கொண்டிருக்கிறோம்?

- மாயாகாவ்ஸ்கி - சோவியத் கவிஞன்


மலர் 3 இதழ் 4 ஆக. செப். 86 அன்பளிப்பு: 3/


- சிறிலங்காவில் இராணுவச் சதி நடைபெறவுள்ளது — சென்னையில் விஜயகுமாரணதுங்க தகவல்
- தேசிய புலனாய்வு அதிகாரிகள் சிலர் திடீர் பதவி இறக்கம் - சிலருக்கு கட்டாய ஓய்வு — செய்தி
- லெப்டினன்ட், சார்ஜன்ட் உட்பட அதிகாரிகளை சுட்டுக்கொன்ற சிப்பாய் தானும் தற்கொலை — குப்புறுப்பிட்டி சம்பவம்
- இன்னும் 150 நாளில் சிறிமாவோ இராணி மாளிகையில்; சீனராணுவம் உதவிக்குவரும் — சூரியப்பெருமா ஹேஸ்யம்

## ஜே. ஆர். சிம்பாபே செல்லாததேன்?

# இராணுவ சதி நடக்குமா?

சிறிலங்காவின் ஜனாதிபதியான ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிம்பாபேயின் தலைநகரான ஹராரேயில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாட்டிற்கு செல்வாரென்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் தான் கலந்துகொள்ளாமல் பிரதமர் பிரேமதாஸாவை அனுப்பிவைத்துள்ளார். ஜே. ஆர். இதன் பின்னணியில் பல ஊகங்கள் சந்தேகங்கள் வெளியிடப்பட்டது. முதலில் ஜே. ஆரின் அரசை அணிசேரா நாடுகள் வன்மையாய் பார்க்கும் என்பதும் அச்சமூதாயத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அமெரிக்க எதிர்ப்பு நிலையை மேற்கொள்ள வேண்டிவரும் என்ற அச்சம் ஜே. ஆரை மகாநாட்டில் கலந்துகொள்ளாமல் தடுத்திருக்கலாம். அத்துடன் தென்னாபிரிக்காவுடன் ஒப்பிட்டு சிறிலங்காவின் இன ஒழிப்பு அம்பலப்படுத்தப்படலாம் என்றும் ஜே. ஆர். எண்ணியிருக்கக் கூடும். எனினும் இவை யாவற்றையும் விட உள்நாட்டில் ஒரு இராணுவச்சதி தனக்கெதிராக திட்டமிடப்பட்டு செயலாக்கப்படும் என்பதே ஜே. ஆர். தற்சமயம் வெளிநாடு செல்லாமைக்கு முக்கிய காரணமாகுமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்த சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜய குமாரணதுங்க அமைப்புத் தோழருடனான பேட்டியிலும் கூட இராணுவச்சதிப் புரட்சியொன்றிற்கான சாத்தியங்கள் பற்றிக் குறிப்பிட்டார். சிறிலங்காவில் வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடிகளும் ஜே. ஆரின் நவபாசிச போக்கும் இனப்பிரச்சினையில் காணப்படும் இழுபறியும் இத்தகைய இராணுவச்சதியை தூண்டுமென்ன எனக் குறிப்பிட்டார் அவர். ஜே. ஆரின் வாரிசு யார் என்பதிலுள்ள பதவிப் போட்டியின் விளைவால் இராணுவ அணிகளுக்கிடையில் கருத்து முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகவும் இவை மோதலாக வெடிக்க முன்னர் சதிப்புரட்சி ஏற்படுவதற்கான சாத்தியம் பற்றியும் அதன் விளைவுகள் குறித்தும் கவலைப்பட்டார்.


ஒருசில மாதங்களுக்கு முன்னர் பி.பி.சி வானொலிக்கு பேட்டி கொடுத்த பெயர் குறிப்பிட விரும்பாத சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் வியட்நாமை வெற்றிகொள்ள அமெரிக்காவினால் முடியாது போனது போலவே ஈழப் போராட்டத்தையும் சிறிலங்கா இராணுவத்தால் முறியடித்துவிட முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார் அல்லவா? இதன் பின்னர் படைகளைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருந்தமை களுத்துறையில் கண்டுபிடிக்கப்பட்டதுடன் தேசிய புலனாய்வு நிறுவனம் எனப்படும் பெயர் கொண்ட உளவுத்தாபனத்தின் உயர் அதிகாரிகள் திடீரென பதவியிறக்கம் செய்யப்பட்டனர். கட்டாய ஓய்விலும், விடுமுறையிலும் அனுப்பப்பட்டனர். இன்னும் சிலர் வேறு பதவிகளுக்கு மாற்றப்பட்டனர். இன்னும் சிலர் தாமாகவே இராஜினாமாச் செய்தனர். இவ்வளவு அமைப்பானது ஜே. ஆரின் மகனான ரவி ஜெயவர்த்தனவின் கட்டுப்பாட்டில் இயங்கி வருவதாகும். இவை விட படையினரில் பலர் மேலதிகாரிகளைச் சுட்டுக் கொன்ற பின்னர் தாமும் தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் பல உண்டு. இதன் ஒருகட்டமாகவே அண்மையில் ஒரு லெப்டினன்ட் ஒரு சப்இன்ஸ்பெக்டர் ஆகியோரை முகாமில் வைத்து சுட்டுக்கொன்ற ஒரு சிப்பாய் தானும் தற்கொலை செய்துள்ளார். இச்சம்பவங்களின் பின்னணி பற்றி குறிப்பிடும் அரசு அறிக்கைகள் ''வெறுமனே லீவு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால்'' …… என்றே காரணம் கூறுகின்றனர். ஆனால் இராணுவத் தலைமையகத்தில் கூட பெண்சிப்பாய் ஒருவரைச் சுட்டுக்கொன்ற இராணுவத்தான் தானும் தற்கொலை செய்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இச்செய்திகளை அவதானிப்பார்க்கும் எவரும் இராணுவச் சதியொன்றின் ஆரம்ப குறிகாட்டிகளாக இவற்றைக் கருதக்கூடும். அடுத்த பொதுத்தேர்தல் ஒன்றை நாடும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், அதன் தலைமையும் தேர்தல் இடம்பெறாது என நம்பிக்கை இழந்து இத்தகைய சதியின் மூலம் மீண்டும் பதவிக்கு வரும் வாய்ப்புகள் குறித்து ஆராயக்கூடும். மேலும் மூப்பு அடிப்படையில் தற்போது பெரும்பான்மை பதவி வகிக்கும் இராணுவ அதிகாரிகள் பலரும் சிறிமாவோ ஆட்சிக்காலத்தில் பதவி பெற்றவர்கள் என்பதும், இவ்வரசியல் பின்னணி பதவியுயர்வுகளைக் கட்டுப்படுத்துகிறது என்பதும் வெளிப்படை. சிறிமாவோ அம்மையாரின் அரச எதிர்ப்பு பிரசாரமும் மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் இனவாத 'முற்போக்காளருடன்' சிறிமா மேற்கொள்ள முனையும் நட்புறவும் இத்தகைய சதி ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்னும் எண்ணத்தைத் தூண்டுவதாயுள்ளது.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட எவரும் பார்வைக்குள் ஒழிந்திருக்கும். ஜே. ஆர். முழு அளவிலான இன ஒழிப்புக்கு தடைக்கல்லாக இருக்கின்றார் எனும் ஐயங்கள் இவை தம் மேலும் தூண்டப்பட்டு தீவிரமாக்கப்படுகையில் இராணுவம் கட்டுமீறக்கூடும். இவ்வச்சத்தின் அடிப்படையிலேயே லலித் அத்துலத்முதலி படையினரை ஊக்குவிக்கும் முகமாக கனரக ஆயுதங்களைப் பாவிப்பதற்கு அனுமதி, விமானக்குண்டுவீச்சுக்கு அனுமதி, என்பவற்றோடு கூட வரையில் இறுதிக்கட்ட மோதல் எனக் கூறுகின்றார். கட்டு மீறிச் செயற்படும் இராணுவத்தின் துணையோடு பதவி பெறும் எண்ணம் லலித்திற்கு உண்டெனத் தெரிகிறது.

இதேபோல் அமைச்சர் காமினி திஸாநாயக்காவும் தனது நேரடி அரசியல் விரோதி எனக் கணிக்கும் தொண்டமானுக்கும், ஜே. ஆருக்கும் இடையேயான உறவு குறித்து கசப்பான கருத்துக்களைக் கொண்டுள்ளார். மலையகத்தை குறிப்பாக நுவரெலியாவை சிங்கள பெரும்பான்மைத் தொகுதியாக்க வேண்டும் என கங்கணங்கட்டிக் கொண்டு செயற்படும் காமினி பொருத்தமான சந்தர்ப்பத்தையே நாடுகின்றார். அண்மையில் தலவாக்கொல்லை டெவன் தோட்டத்திற்கு அருகில் ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்ட சிங்கள இளைஞர்கள் ஒருசில மணி நேரத்தில் விடுவிக்கப்பட்டதும், புதிது புதிதாக முளைக்கும் குடியேற்றங்களும் காமினியின் எண்ணத்தை துல்லியமாகத் தெரியவைக்கின்றது. வாரிசுகளுக்கிடையிலான பதவிப் போட்டியில் காமினி லலித் தரப்பு மோதல்கள் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்த வேளை


(6-ம் பக். பார்க்க.)


**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்**

## மலையகத்தில் தொடரும்

# ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்

மலையகத்தில் சில பகுதிகளை இணைக்கும் போது மாகாண சபை அமைப்பு ஏற்பட்டாலும் கூட அங்கு சிங்களவர்களே பெரும்பான்மையினராவர். என காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா கடந்த மாதம் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில் அங்கு தொடராக இடம் பெறும் சம்பவங்களை உற்று நோக்குதல் அவசியமாகும். கடந்த ஜூன் மாத பிற்பகுதியில் ஹெலிவத்த தோட்டப் பகுதியில் தரிசு நிலத்தில் குடியேறியிருந்த தமிழ்த் தொழிலாளர்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சி பலாத்காரமாக மேற்கொள்ளப்பட்டது. ஒரு கலவரமாக அது உருப் பெற்றது.

பூண்டுலோயாவில் 'சீன்கம' என்ற பகுதிக்கு வரும் தொழிலாளர்களிடம் அங்குள்ள கும்பலொன்று அண்மைக் காலமாக கப்பம் கேட்டு துன்புறுத்தி வந்துள்ளது. ஜூலை 2 ஆம் திகதி பூண்டுலோயா தோட்டத்தில் வேலை செய்யும் தமிழ் இளைஞர்கள் மூவர் படம் பார்த்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் தாக்கப்பட்டதை தொடர்ந்து இப்பகுதியில் கலவரம் உருவாகியது. ஆயினும் கலவரம் தொடர்பாக 12 தமிழ் இளைஞர்களையே பூண்டுலோயா பொலிசார் கைது செய்தனர். இதை எதிர்த்து கற்கள், தடிகள் சகிதம் சுமார் 500 தொழிலாளர்கள் பொலிஸ் நிலையத்தை சுற்றிவளைத்ததன் விளைவாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இதனையடுத்து சிங்களவர் குடியேற்றத் திட்டத்திலிருந்து தலவாக்கலையிலுள்ள 'வட்டகொட' தோட்டத்தில் புகுந்து குண்டர்களின் கோஷ்டி ஒன்றினால் அங்கு 15 கடைகள் தீக்கிரையாகின. சிங்களக் குடியேற்றத் திட்டப் பகுதியிலும் சேதங்கள் ஏற்பட்டன. தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி 15,000 தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். எனினும் பஸ்ஸிலும், வாகனங்களிலும் நகருக்கு அத்தியாவசியப் பொருட்கள் வாங்கச் சென்ற தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். பூண்டுலோயாவைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் பஸ்ஸில் கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டார்.

ஜூலை மாதக் கடைசியில் கண்டியிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ள 'பன்வில' வில் 'சல்பில்ல' தோட்டத்துக்குள் புகுந்த காடையர் கோஷ்டி ஒன்று லயனில் 12 தொடர் வீடுகளில் கொள்ளையிட்டு, தீ வைத்து தாக்கினர். வவுனியாவில் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பில் இறந்த பன்வில வாசியின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு தங்கிநின்ற காடையர் கோஷ்டியே இதனைச் செய்தது. இக்குடும்பங்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்கு ஆதரவழிப்பவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு மாதங்களாக சுமார் 60 சிங்கள இளைஞர்கள் தலவாக்கொல்லை டெவன் தோட்டக்காணியில் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். இவர்கள் இப்பகுதி தொழிலாளர்கள் சிலரை தாக்கியும், தொந்தரவு செய்தும் வந்துள்ளனர். இரவில் நகருக்குச் சென்று திரும்பும் தொழிலாளர்களின் பொருட்கள் வழிப்பறி செய்யப்பட்டுள்ளன. கடந்த 22-8-86 அன்று டெவன் தோட்ட ஆசிரியை ஒருவரின் வீட்டை தாக்கிய மேற்படி இளைஞர்கள், அவரது உடமைகளை தீயிட்டுக் கொளுத்தினர்.

இச்சம்பவங்களை கண்டித்து அடுத்தநாள் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அன்றைய தினம் இரவு அச்சிங்கள இளைஞர்களால் டெவன் தோட்ட லயன்கள் சில தாக்கப்பட்டுள்ளன. ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் அவர்களைத்தேடிச் சென்றபோது நால்வர் மட்டுமே அகப்பட்டனர். அவர்களது இருப்பிடத்தில் தொழிலாளர்கள்; டைனமைற்றுகள், கிரனேட்டுகள், பெற்றோல் கைக்குண்டுகள் என்பவற்றை கைப்பற்றினர்.

நிலைமை இவ்வாறிருக்க, வடபகுதி மார்க்ஸிய பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மலையகத்தின் மூன்று பொலிஸ் பிரிவுகளில் 25-8-86 அன்று 18 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மண்சரிவு நிகழ்வுகளினால் அகதிகளான சிங்களவர்களை நுவரெலியாவிலுள்ள மகாஊபாத்தோட்டத்தில் குடியேற்ற இம்மாதத்தில் அரசாங்கம் முயற்சித்தது. இதனால் அப்பகுதிவாழ் தமிழ்த்தோட்டத் தொழிலாளர்கள் அகதிகளாகும் ஆபத்து உருவாகியுள்ளது. இதனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் ஆகியன வன்மையாக எதிர்த்துள்ளன.

எம்மில் அநேக சக்திகள் வடக்கிலும், கிழக்கிலும் தமது கவனத்தை செலுத்திக்கொண்டிருக்க, மலையகத்தில் அரசாங்கம் இவ்வாறாக திட்டமிட்டு தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைளை விஸ்தரித்து வருகிறது. ஆயினும் மலையகத் தொழிலாளர்கள் அதனை எப்போதும் எதிர் கொண்டு போராடத் தயாராக இருக்கிறார்கள் என்பதையே அங்கு நிகழும் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

## தென்னிலங்கை-

# இடதுசாரிகளின் திரிபு.

**"இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில், இப்பகுதி மக்களின் விருப்பத்திற்கு இசைவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுயாட்சிப் பிராந்தியங்களை அவை விரும்பினால் ஒன்றிணைப்பதற்கான உரிமையுமான பிரதேச சுயாட்சிக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதும், பிரயோகம் செய்வதும்"**

*(1980, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 11வது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரகடனம்)*

இடதுசாரிகள் எனத் தம்மை அடையாளம் காட்டிய இடதுசாரிக் கட்சிகளின் தலைமைத்துவம் தென்னிலங்கை பெரும்பான்மை இனத்திடமே பொதிந்துள்ளது. இவர்கள் தமது தேவைகளை ஒட்டி காலத்துக்கு காலம் அறிக்கைகளையும், பிரகடனங்களையும் மட்டுமே வெளியிட்டுள்ளனர். இந்த அறிக்கைகள் எந்த வகையிலும் மக்கள் மத்தியில் பிரதிபலிப்பதில்லை. ஏனெனில் அவற்றினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் இவர்களுக்கு அக்கறை இருப்பதில்லை. தேர்தலில் தமக்கும் ஆசனம் பிடித்துவிடவேண்டும் என்ற வெளிப்பாடு மட்டுமே அறிக்கைகளாக வெளிவந்தன. இதற்குரிய பலாபலனை 1978 ஆம் ஆண்டு தேர்தல் முழுமையாக வழங்கிவிட்டது. இந்தவகையிலேதான் 1980 களில் இவர்களால் வெளியிடப்பட்ட மேற்கண்ட பிரகடனமும் காலத்தின் தேவையை ஒட்டியது. மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்கான தேர்தல் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற; அரச எதிர்ப்பாளராகவும், தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் முனைப்புக் கொண்டோராகவும் உள்ள தமிழ்பேசும் மக்களை கவருகின்றதாகவே இந்தப் பிரகடனம் அமைந்துள்ளது.

தமிழ்பேசும் மக்கள் தமது உயிர், உடமை, உரிமை என்பவற்றினை இழந்து சொந்த மண்ணிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாகவும், அநாதைகளாகவும் வாழுகின்ற இவ்வேளையில்; அவற்றுக்கான சரியான தீர்வினை முன்வைத்து செயற்படாதிருப்பதும், அவர்களது வாழ்வுக்கான உடமைப் போராட்டத்தினை வெறுமனே உரிமைகள், சலுகைகளுக்கான போராட்டமாகக் கணிப்பதும் இந்த இடதுசாரிகளின் போலித்தனங்களை எடுத்துக் காட்டுகின்றன. இன முரண்பாடுகள் கூர்மையடைய வைக்கப்பட்டுள்ள இவ்வேளையில் மக்களை சரியான பாதையில் முன்னெடுக்க வேண்டிய முன்னோடிகளான இடதுசாரிகள் கூட இனவாதத்தில் மூழ்கியிருப்பது இந்த இடதுசாரிகள் யார் என்பதை அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது.

தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்கிறோம், ஆனால் பிரிந்து செல்வதை அனுமதிக்க முடியாது என்பதும், மலையகத் தமிழ் தொழிலாளர் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்பதும்; தொழிலாளரை இனங்காணத்தெரியாத தன்மையினையும், ஒரு இனத்தை அடக்கி வைத்திருக்க வேண்டும் என்ற பேரினவாத போக்கையும் வெளிக் காட்டுகின்றது. ஆயினும் தமிழ் போராளிகளின் இன்றைய போராட்ட வடிவங்கள், போக்குகள் குறித்து பெரிதும் அலட்டிக் கொள்கின்றனர்.

போராளிகளின் போராட்ட உணர்வினை ஏற்றுக் கொள்வதாகக் கூறும் இவர்கள் தனிநாடுதான் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு அல்ல என்றும் விமர்சனம் செய்கின்றனர். ஆனால் சரியான தீர்வுக்கான அல்லது அரசின் இன ஒழிப்பு நடவடிக்கைகளை கண்டிக்கும்படியான எந்த ஒரு வெகுசன எழுச்சிப் போராட்டத்தையும் முன்னெடுக்கவில்லை. 1948/49 களில் மலையகத் தமிழர் சொந்த மண்ணில் அநாதைகளாக்கப்பட்டபோதும், 1972, 1978 அரசியல் திட்டங்கள் இந்நாட்டின் சிறுபான்மை இனத்தை நிராகரித்தபோதும் எந்த ஒரு வெகுஜன எதிர்ப்பு நடவடிக்கையினையும் மேற்கொள்ள முடியாத இவர்களால் தமிழ் போராளிகளின் போராட்ட உணர்வினைப் பயன்படுத்தி இந்த நாட்டில் ஒரு வர்க்க விடுதலையை எந்தக் காலத்திலும் மேற்கொள்ள முடியாதென்பது வெளிப்படையானதே.

தமிழ்பேசும் மக்களின் பிரச்சினையை சரியானபடி விளங்கிக்கொள்ள முடியாத இவர்கள், ஒற்றையாட்சிக்குட்பட்ட அடிப்படை உரிமைகள் எதனையும் வழங்காத மாகாண சபைத் திட்டத்தின் மூலம் பிரச்சினையை தீர்க்கலாம் என்று உறுதியாக நம்புகின்றனர். இந்த நம்பிக்கை; தனிநாடு ஒன்று உருவாகி அது சோசலிச அமைப்பாக இயங்குமிடத்து தமது போலித் தனங்கள், வர்க்க நலன்பாட்டுச் செயல்கள், பித்தலாட்டங்கள் என்பன வெளிப்பட்டு தாம் தூக்கி எறியப்பட்டு விடுவோம் என்ற அடிப்படையில் பிறந்தது அன்றி வேறில்லை.

எந்தவகையிலும் திருப்தி தராத மாகாணசபைத் திட்டத்தினை சரியான தீர்வென்பதும், தந்துவார்த்த ரீதியாக தமது எதிரியான முதலாளித்துவ சோவனிச ஆட்சியாளருடன் இணைந்து நின்று அதனைத் திணிப்பதும் இவர்கள் யார் என்பதை வெளிக்காட்டுகிறது. இவ்வாத அரசியல் அள்ளுண்ட இவர்கள் தம்மை அரசியலில் நிலைப்படுத்திக்கொள்ள முதலாளித்துவக் கட்சிகளில் ஏறி இடதுசாரி அங்கி அணிந்து பவனி வருகின்றனர். இந்த ராஜபாகம் இவர்களது கனவுலகையும், கருத்தழிந்த சிந்தனையையும் வெளிக்காட்டி இவர்கள் எந்தப்பக்கம் என்பதை நிரூபித்துள்ளது.

## வாகரையில் நிலக்கண்ணி வெடி!

# 19 இராணுவம் பலி...

வாகரை புனியங்கண்டடி வீதியில் கடந்த 11-08-86 அன்று எம்மால் மேற்கொள்ளப்பட்ட நிலக்கண்ணித் தாக்குதலில் 19 இராணுவத்தினர் பலியாகினர். வாகனமும் பலத்த சேதமடைந்தது. ஈழத்தின் கிழக்குப் பகுதியில் இராணுவ ரோந்து என்ற அடிப்படையில் இனக் கொலைகள் தொடர்வதை கட்டுப்படுத்தவே இத்தாக்குதல்கள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தாக்குதலின்போது SAR ரக துப்பாக்கிகள் எம்மால் கைப்பற்றப்பட்டன.




## திருமலை 'எலிபன்ட் ஹவுஸ்'

# குண்டு வைத்துத் தகர்ப்பு!

திருமலை நகரிலும், அதனை அண்டிய கிராமங்களிலும் அரச இராணுவத்தினர் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்பேசும் மக்களைக் கைது செய்து பயங்கரவாதிகள் என பூஷா முகாமுக்கு அனுப்பிவைத்தனர். இதன் பின் நகரில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து தமது அட்டகாசங்களை மேற்கொண்டனர். இவ்வேளையில் 15-07-86 அன்று திருகோணமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள 'எலிபன்ட் ஹவுஸ்' எம்மால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இதனால் இயந்திரங்களும், கட்டிடமும் பலத்த சேதத்துக்குள்ளானது. இந்த நடவடிக்கை அப்பாவி மக்களையே அரசு கைது செய்து பயங்கரவாதப் பட்டம் சூட்டுகிறது என்ற உண்மையை மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

# ஈழப்போராட்ட முன்னெடுப்பில் இஸ்லாமிய மக்கள்..

வடக்கு, கிழக்கு, மலையகம் என்று பிரதேச வாரியாகவும், இந்துக்கள், இஸ்லாமியர் என மத ரீதியாகவும் ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்களை பிளவுபடுத்தி, அவர்களது போராட்டசக்தியை சிதறடிக்க, சிறிலங்கா அரசு பகிரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. சிங்கள சோவனிச அரசாங்கத்தின் திட்டமிட்ட இச்சூழ்ச்சிகளுக்கு துணைபோகாதவாறு தத்துவார்த்த ரீதியிலும், நடைமுறைரீதியிலும் மிகுந்த அவதானத்தை கடைப்பிடிக்க வேண்டிய இக்காலகட்டத்திலே இஸ்லாமிய மக்கள் பற்றிய சரியான ஒரு கண்ணோட்டத்தை நாம் கொண்டிருக்க வேண்டும்.

## இஸ்லாமியர் வரலாற்றுப் பின்னணி

வரலாற்றை பின்னோக்கி பார்ப்பாமாயின் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில அராபியர் எழுச்சி ஏற்படுத்திய வாத்தக விரிவாக்கமும் அதன் பலனான தொடர்புகளும் இஸ்லாமிய மதம் இலங்கையில பரவுவதற்கு காரணமாய் இருந்தன காலப் போக்கில தமிழ் பேசும் மக்கள் மததியில கலப்படுக்கப்பட்டு வந்த மதங்களுள இஸ்லாமும் ஒன்றாக உருப்பெற்றலாயிற்று.

மதரீதியான கோட்பாடுகள அனுஷ்டானங்களை ஒட்டியுள்ள சில வேறுபாடுகள் காணப்பட்டபோதும் மொழி, பண்பாடு பழக்கவழக்கங்கள் உட்படசமுதாய மட்டத்தில தேசிய இன இலட்சணங்கள் பலவற்றிலும் ஏனைய தமிழ்பேசும் மக்களுடன் இஸ்லாமியர்களும ஒத்ததன்மைகளை கொண்டுள்ளவர். சிறிலங்காவில் பரவலாக இஸ்லாமிய மககள் வாழ்கின்றபோதிலும், அவர்கள் செறிவாக வாழும் அம்பாறை, திருமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய நான்கு மாவட்டங்களும் ஈழப பிரதேசத்தின உள்ளே அடங்குகின்றன. இஸ்லாமியர்களின் தாய் மொழி பற்றி ஆரம்ப காலங்களில் அவ்வப்போது ஏற்பட்ட ஐயப்பாடுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 1950இல் தமிழ்மொழியே அவர்களது தாய்மொழி என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏ. எம். ஏ. அஸீஸ் போன்ற கல்விமான்களின் முயற்சியும், பாராளுமன்றத்தில் எழுந்த சர்ச்சைகளுக்குப் பின்னான தீர்மானங்களும் இதற்கு மெருகூட்டின. இன்று இனரீதியாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அட்டூழியங்களுக்கு இந்துக்கள் இஸ்லாமியர் என்ற மத வேறுபாடுகளின்றி தமிழ்பேசும் மக்கள் என்ற ரீதியில் அனைவரும் பலியாவதை நிதர்சனமாகக் காண்கிறோம்.

## இஸ்லாமிய மக்கள் மீதான இனவாத அரசின் தாக்குதல்கள்–

பிரித்தானிய ஆட்சிக்காலத்தின் போது வர்த்தகத் துறையை இஸ்லாமியர் கைகளிலிருந்து பறித்தெடுத்து தமது ஏகபோகமாக்கிக்கொள்ள சிங்கள நிலப்பிரபுக்கள் முயற்சித்த தன் விளைவே 1915ஆம் ஆண்டு சிங்கள இஸ்லாமிய கலவரமாக வெடித்தது. தொடர்ந்து 1948 ஆம் ஆண்டு பிரித்தானியராட்சியிலிருந்து விடுதலை பெற்று சிங்கள நிலபபிரபுக்கள் தேசிய முதலாளிகளின் கையில் ஆட்சி கைமாறிய பின்பும் இனரீதியாக தமிழ்பேசுவோர் என்றவகையில் அடையாளம் காணப்பட்டு, இஸ்லாமியமக்கள் தாக்கப்பட்டே வருகின்றனர்.

## அம்பாறையில் இஸ்லாமியர் மீதான ஆக்கிரமிப்பு

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஈழப்பிரதேசங்களில் இஸ்லாமியர்கள் செறிந்துள்ள பிரதேசங்கள் அபகரிக்கப்படுகின்றன. அம்பாறை பிராந்தியத்தில் ஆக்கிரமிப்பு நடவடிக்கை 1940 உடன் தீகவாபியில் ஆரம்பித்தது பௌத்த விகாரையின அபிவிருத்திக்காக 585 ஏக்கர் நிலம இப்பகுதி இஸ்லாமியர்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்டது. இங்குறுள சனிக்கூட்டுத்தாபன அபிவிருத்தியுடன ஏறத்தாள இப்பகுதிவாழ் சகல இஸ்லாமியர்களையும் அவர்களது காணியிலிருந்து அரசாங்கம வெளியேற்றியது

1982இல் கப்பத்துவிலே அண்டிய அருகம்பை, உலலை பகுதி வாழ் இஸ்லாமியரின் குடியருப்புகக தீவைக்கப்பட்டு அவர்கள் விரட்டப்பட்டனர். கலமுனைப் பட்டணத்திலும் அரசாங்க வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளும் விகாரையும் கட்டப்பட்டு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

அம்பாறை பிரதேசத்தில் 1921ஆம ஆண்டு 4% மட்டுமே சிங்களவர்கள் வாழ்ந்தனர். இந்நிலை மாறி 1981இல் 24% மாக அவர்கள் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலையில் சிங்கள மயமாக்கல்

இதேபோன்று திருகோணமலைப் பிராந்தியத்தில் அல்லை, கந்தளாய் குடியேற்றத் திட்டங்களில் இஸ்லாமிய விவசாயிகள் தங்கள் நிலங்களை இழந்தனர். தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பொத்தானை பகுதியில் 1952 ஆம் ஆண்டு அப்பகுதி வாழ் இஸ்லாமியர் புறக்கணிக்கப்பட்டு நிலம் பிற மாவட்ட சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இப்பிராந்தியத்தில் 'அக்பர் புரம்' என்றழைக்கப்பட்ட கிராமம் இப்போது 'அக்போபுர' என்றபெயரில் சிங்கள கிராமமாக மாற்றப்பட்டுள்ளது.

திருமலையில் இஸ்லாமியர் கூடுதலாக வாழும் பகுதி கிண்ணியாவாகும். 1967 ஆம் ஆண்டு ''வானலை'' குடியேற்றத்தின் மூலம் இப்பகுதியை அண்டிய பிரதேசங்களில் விவசாயம் செய்துவந்த விவசாயிகள் விரட்டியடிக்கப்பட்டனர். இது ஒரு சிங்கள இஸ்லாமியக் கலவரமாகக் கூட உருவெடுத்தது. வானமடு குடியிருப்புகளில் வாழ்ந்த இஸ்லாமியர்களும் விரட்டியடிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் புல்மோட்டை பதவியாக் குடியேற்றத் திட்டத்தின் மூலமும், மற்றும் புடவைக்கட்டு முள்ளிப்பொத்தானை போன்ற இஸ்லாமியக் குடியிருப்புகள் குடியேற்றங்களால் சூழப்பட்டும் பெயர் மாற்றப்பட்டும சிங்கள மயமாக்கப்படுகிறது.




விவசாயிகள் மட்டுமன்றி ஏனைய துறைகளில் உள்ள இஸ்லாமியர்களும் பாதிப்பினை அடைந்துள்ளனர். சேனநாயக்கா சமுத்திரம், அம்பலவாணர் குளம், பன்னலகம குளம் ஆகிய மீன்பிடிப்பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஏறுவூர் பகுதியிலுள்ள புன்னைக்குடாவிலும் மீன்பிடி அமைச்சின் அனுசரணையுடன் சிங்களவர் மீன்பிடித் தொழிலை ஆக்கிரமித்துள்ளனர் இஸ்லாமியர் வசமிருந்த வர்த்தகத்துறை சுருக்கப்பட்டு 8% மட்டுமே இஸ்லாமியர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதே போன்று இராணுவத்தில் 1% த்திற்கு மேல் இஸ்லாமியர்கள் இல்லை.

## மத ஸ்தலங்களிலும் கை வைத்தனர்

இஸ்லாமிய மக்களின் மத நிறுவனங்கள் கூட பேரினவாத நடவடிக்கைகளால் பாதிப்புற்றன. 1974 நவம்பர் 13 அன்று மகியங்கனையிலுள்ள பங்கரகம என்னும் இஸ்லாமியக்கிராமத்தில் 57 வீடுகள் சிங்களவர்களால் தீவைக்கப்பட்டதுடன், பள்ளிவாசல்கள் உட்பட பல வீடுகள் உடைத்து நொருக்கப்பட்டன. 1983 டிசம்பர் 18 அன்று மாவில் மடையிலுள்ள கவுறடி தரைமட்டமாக்கப்பட்டு, பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்டது

## தொடரும் படுகொலைகளும் பலாத்காரங்களும்

இவற்றின் உச்சக்கட்டமாக இப்போது படுகொலைச் சம்பவங்கள் அதிகரித்தவண்ணமிருக்கின்றன. 1976 ஒக்டோபர் 26 அன்று புத்தளம் பள்ளிவாசலில் ஆறு இஸ்லாமியர் தொழுகையிலிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டனர். தொடர்ந்து தோட்பூர், பொத்துவில், நிந்தவூர் மூதலிய இடங்களிலும் இராணுவத்தின் வேட்டுகளுக்கு அப்பாவி இஸ்லாமிய விவசாயிகள் பலியாகினர். 85 செப்டெம்பர் 14ல் மூதூரில் ஐந்து இஸ்லாமிய விவசாயிகளை இராணுவம் சுட்டுக்கொன்றது. 85 நவம்பர் 9இல் வேலமரத்து வெளியில் இஸ்லாமியப் பெண்கள் ஐவர் சிங்கள ஊர்காவற்படையினரால் பலாத்காரப்படுத்தப்பட்டனர். 86 ஜூலையில் மன்னாரில் உள்ள பேசாலையில் மூன்று மீன்பிடி படகுகளை ஆயுதப்படையினர் தாக்கியதால் ஒரு தமிழரும ஆறு இஸ்லாமிய மீனவரும் கொல்லப்பட்டனர்.

இஸ்லாமிய மக்கள் இவ்வாறுக பேரினவாதக்கரங்களுக்குள் அகப்பட்டு நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, கொழும்பு கண்டிபோன்ற பகுதிகளை மையமிட்டு வியாபாரத் துறையில் ஈடுபட்டிருந்த மேல் மத்தியதர வர்க்கத்து இஸ்லாமியர்கள் இவற்றைக் கண்டித்து குரல் எழுப்பாத அதே வேளை வடக்கு, கிழக்கு, கரையோரப்பகுதி வாழ் இஸ்லாமிய மக்களது பிரதிநிதிகளாகத் தம்மைக் கருதிக்கொண்டனர். தமது சொந்த வர்க்க நலன்களுக்காக, அம்மக்களது இறைமைகளை அரசுக்கு தாரை வார்த்துக் கொடுத்து மந்திரி சபையிலும், பாராளுமன்றத்திலும் அங்கத்துவம் பெற்றனர், வடக்கு, கிழக்கில் வாழ்ந்த அதே மேல்த்தட்டு வர்க்க நலனை பிரதிபலித்த சிலரும் இதற்கு துணைபோயினர்.

## தமிழர் கட்சிகளும், விடுதலை இயக்கங்களும் விட்ட தவறுகள் அரசின் சதி முயற்சிகளுக்கு துணை போனமை

ஆரம்பகாலத்தில் 1956-60 களில் இஸ்லாமிய மக்கள் தமது பிரதிநிதிகளை தமிழர் கட்சிகளூடாக தெரிவு செய்திருந்தனர். இத்தகைய பிரதிநிதிகள் கொழும்பு சார் வர்க்க நலனை பிரதிபலித்து கட்சி மாறியபோது இஸ்லாமியர் அரசியல் நிதானமற்றவர்கள் என்ற பட்டம் அவர்களுக்கு சூட்டப்பட்டது. ஆனால், உண்மையில் அதேயளவு கட்சி மாறல்களும், தளம்பல்களும் தமிழர் பிரதிநிகளிடமும் காணப்பட்டமை கவனத்திலெடுக்கப்படவில்லை.

இன்று போராட்டத்தை முன்னெடுக்கவென களத்தில் இறங்கியுள்ள விடுதலை இயக்கங்களும் இஸ்லாமிய மக்களை சரியானபடி அணுகுவதில் தவறியுள்ளனர். தனிநபர் மீதான கொள்ளை, கொலை, ஆள்கடத்தல்,வாகனக்கடத்தல் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்த போது மனக்கசப்புகளும் வளர்ந்தன. இதனை சரியாக பயன்படுத்திய அரசு இஸ்லாமியர் மத்தியிலிருந்த பிற்போக்கு சக்திகளின் உதவியுடன் ஜிகாத், ஹிச்ரா போன்ற இயக்கங்களை உருவாக்கி ஆயுதப்பயிற்சியளித்து கலவரங்களை தூண்டியது. இதன் விளைவே 85 ஏப்ரலில் கிழக்கில் ஏற்பட்ட இந்து-இஸ்லாமிய கலவரமாகும். தற்போது 86 ஒகஸ்ட்டிலும் இத்தகைய நிலைமை கல்முனையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை அதிகாரப்பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வு காண முயற்சிப்பதாக கூறப்படும் இவ்வேளையில், பாரம்பரிய தமிழர் தாயகம் பற்றிய கோரிக்கையை இஸ்லாமியர்கள் அழுத்தி நிற்பது வெளிப்படையாகியுள்ளது. இந்நிலையினை குழப்பியடித்து இஸ்லாமியர்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களது கோரிக்கைகளுக்கு ஆதரவில்லை எனக் காட்டவே அரசாங்கம் பகிரதப் பிரயத்தனம் செய்துவருகிறது.

## சிறீலங்கா அரசின் அடக்குமுறைக்கெதிரான இஸ்லாமிய மக்களின் நடவடிக்கைகள்

மத்தியதர மேல்மட்டத்து இஸ்லாமியர் அரசுடன் இணைந்து, இஸ்லாமிய மக்கள் மீதான அரசின் அடக்குமுறைகளை இருட்டடிப்பு செய்த போதும், அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்ட அடித்தளமக்கள் அவ்வப்போது அரசுக்கெதிரான தமது எதிர்ப்பைக் காட்டியே வந்துள்ளனர். 1952ஆம் ஆண்டு மாவனல்லையில் பேரினவாத நடவடிக்கைக்கெதிரான போராட்டத்தைக் கிளப்பினர். இதே போன்று 1956ஆம் ஆண்டு பதித்தாம்பிட்டி இஸ்லாமியரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். 60 களில் தமிழரசுக்கட்சி தலைமையில் இடம் பெற்ற அஹிம்சைப் போராட்டங்களில் இணைந்து இஸ்லாமிய மக்கள் காட்டிய எதிர்ப்பு மறைக்கப்பட முடியாததாகும்

தமிழ் பேசும் மக்களது நியாயமான போராட்டத்தை ஆயுதமுனையில் மழுங்கடிப்பதற்காக சிறீலங்கா அரசு சர்வதேச பயங்கரவாதிகளான இஸ்ரேலியரின் துணையை நாடியபோது, அதற்கெதிராக இஸ்லாமிய மக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்ப்புணர்வு இங்கு குறிப்பிடத்தக்கது. 12-10-84 அன்று இடம்பெற்ற இஸ்ரேலிய மொசாட்டின் வருகைக்கெதிரான கர்த்தால், ஆர்ப்பாட்டம் என்பவற்றில் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் முன்னின்று இஸ்லாமிய மக்கள் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தினர்.


86இன் முற்பகுதியில் குறிப்பாக வட பகுதியில் இராணுவ முகாம்களை சூழவுள்ள 1000 மீற்றர் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்திய அரசாங்கம் அப்பகுதி வாழ் மக்களை வெளியேறுமாறு அறிவித்தபோது யாழ், நகர் வாழ் இஸ்லாமிய மக்கள் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். இதே கால கட்டத்தில் கொழும்பு கொம்பனித் தெருவில் இஸ்லாமியர் வாழும் பகுதியில் இரா

(5-ம் பக். பார்க்க)

# தங்கவேலாயுதபுரம்...

பானை நிறைய
சோறு பொங்குமென்று
கனவுகளுடன்
அவர்கள்
வயலுக்குச் சென்றனர்.
ஆனால்
பொங்கி நிலம் நனைந்ததோ
அவர்களின் குருதி
இன்று
குருதியின் ஈரத்திலும்
விதைப்புக்கள் தொடர்கிறது!

தங்கவேலாயுதபுரம் என்னும் எங்கள் கிராமம் ஈழத்தின் தென்பகுதியாகிய அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று என்னும் கிராமத்திலிருந்து தெற்கே பத்தொன்பது மைல் தொலைவில்; தென்பகுதியில் உடும்பன் குளம் என்னும் பொன்விளையும் பூமியையும் கிழக்கே சங்குமான் கண்டி என்னும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தையும் வடக்கே பாலக்காச்சி என்னும் வயல் வெளியையும் மேற்கே சஞ்சிகுடி ஆறு என்னும் பெரிய குளத்தையும் எல்லையாகக் கொண்டமைந்த எழில் மிக்க ஒரு சிறிய கிராமமாகும். எங்கள் கிராமம் ஓர் பழம்பெரும் கிராமம் அல்ல. எங்கள் தாய் கந்தையர் சொறிக்கல்முனை, நீலாவணை, தம்பிலுவில், திருக்கோயில் போன்ற கிராமங்களிலிருந்து வாழ்வு தேடி வயற்செய்கை, சேனைச்செய்கைகளுக்காக, குடியேறிய இடமே இந்த தங்கவேலாயுத புரமாகும்.




## குருதியின் ஈரத்திலும் விதைப்புக்கள் தொடர்கிறது.

### பொருளாதாரநிலை

எங்களைச்சுற்றி எவ்வளவு தான் இயற்கைவளம் இருந்தாலும் எங்களால் ஒரு பூரணமான மனிதவாழ்வை மேற்கொள்ளமுடியாதளவு இன்றைய பொருளாதார சமூக அமைப்பு எங்களைப்புறக்கணித்திருந்தது. 200 குடும்பங்களை நிரந்தரமாகக்கொண்ட எங்கள் கிராமத்து மக்களின் தொழில் நெல், சோளம், கச்சான், மிளகாய் போன்ற விவசாய உற்பத்திகளும், அண்டியுள்ள வயல் புற்தரைகளில் மந்தைவளர்ப்பை மேற்கொள்வதுமாகும். எங்கள் விவசாய உற்பத்தியின் முழுப் பயனையும் எங்களால் நுகரமுடியவில்லை. உற்பத்தியின ஆரம்பக்காலகட்டங்களில் தேவையான விதைநெல், சோளம், கச்சான் போன்றவையும், உரம். கிருமிநாசினி போன்றவையும் வாங்குவதற்கு அரசினால் எந்த உதவியும் எங்களை வந்தடையவில்லை, இத்தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக, சில 'தரகுமுதலாளி' களையே நாட வேண்டிய நிலை எங்களுக்கு ஏற்படுகிறது. இது முற்பணம் என்னும் போர்வையினால் முழுமையாக நாங்கள் சுரண்டப்படுவதற்கு வழிசமைக்கின்றது. எங்கள் பகுதியில் மானாவாரிச் செய்கையின் போது கூடியளவு மக்கள் வாடிகளை உருவாக்கி பரவலாக விவசாய செய்கையில் ஈடுபடுவார்கள். இவ்விவசாயிகள் அநேகமாக திருக்கோயில், தம்பிலுவில், விநாயகபுரம், அக்கரைப்பற்று கோளாவில் சொறிக்கல்முனை, நீலாவணை, போன்ற இடங்களிலிருந்தே, நகர்ந்து வருபவர்களாக இருப்பார்கள். இக்காலகட்டத்தில் எங்கள் பகுதியில் 600 க்கு மேற்பட்ட குடிசைகளும் 40, 50, அடி உயர காவற்பரண்களும் காணப்படும். இருந்தும் சமூக அமைப்பின் உற்பத்தி உறவுகளின் தாக்கங்கள், எங்களை வெகுவாகப்பாதிக்கும், எங்கள் பிரதேசத்துக்கேற்ற உணவு மற்றும், முக்கிய தேவைகளைப் பெறுதல் குதிரைக்கொம்பு தேடும் முயற்சியாகவே இருக்கும். எங்கள் தேவையின் முக்கியத்துவத்தையுணர்ந்து கொண்ட சில வியாபாரிகள் ஏதோ பெரும் சேவை மனப்பான்மையுடன் உதவி செய்வதுபோல் பொருட்களை கொண்டுவந்து அதிக விலைக்கு விற்று ஆதாயம் தேடுவதை காணமுடிகிறது. இவற்றுக்கு முக்கியகாரணம் எமது கிராமம் கிழக்கிலேயுள்ள பிரதான பாதையில் இருந்து வெகு தூரம் உள்ளே இருப்பதுதான். இதன் காரணமாக போக்குவரவு வசதிகள் மிகவும் குறைவு. எங்கள் கிராமத்துக்கு வரும்பாதை இக்காலத்தில் சேறும் சகதியுமாககாணப்படுவதால் எந்தவிதமான வாகனப் போக்குவரத்தும் செய்யமுடியாதிருக்கும் அடுத்து எமது கிராமத்தில் ஒரு கூட்டுறவுக் கடையுள்ளது. அதில் தேவையான நேரத்தில் தேவைப்படும் பொருட்களை வாங்க முடியாது.

### எமது குழந்தைகளுக்கு கல்வி வசதி இல்லை

இப்படியான சூழலில் வாழும் எங்கள் குழந்தைகள் கல்வியை மேற்கொள்ள ஏற்ற முழுவசதியும் இங்கு கிடையாது. ஒரு பாடசாலையுள்ளது. அதில் மூன்றும் தரத்திற்கு மேல் கல்வி கற்க எந்தவித வசதியும் கிடையாது. இவர்கள் தொடர்ந்து கல்வியை மேற்கொள்ள வேண்டுமென்றால் ஒன்பது மைல்களுக்கப்பாலுள்ள தம்பிலுவில் என்னும் கிராமத்தை நோக்கிச் செல்லவேண்டிய நிலை. அங்கு செல்வதென்றால் இவர்களின் பொருளாதார நிலையும் போக்குவரத்து வசதியும் இவர்களுக்கு தடையாகவுள்ளன. கடந்த காலங்களில் எங்கள் தலைவர்கள் என்று கூறிக் கொண்டு எங்களிடம் வாக்குப் பெற்றவர்கள், உயர்கல்வி பறிக்கப்படுவதாக உயிர்பேசுகத்தினார்கள். ஆனால் எங்களைப் போன்ற ஆயிரமாயிரம் சிறார்களின் அடிப்படைக்கல்வி பற்றி கவனியாது இருந்தது அவர்களது வர்க்க நலம் சார்ந்த நடிக்கையையே காட்டுகிறது

### வைத்தியசாலை இராணுவ முகாமாகியது...

இக்கிராமத்தில் இருந்து 9 மைல்களுக்கப்பால் திருக்கோயில் என்னுமிடத்தில்தான் வைத்தியசாலை அமைந்துள்ளது. அங்கு செல்ல போக்குவரத்து வசதிகள் இல்லை. அவ்வைத்தியசாலை கூட இப்போது இராணுவமுகாம் ஆக்கப்பட்டுள்ளது. எனவே 30 மைல் தொலைவிலுள்ள அக்கரைப்பற்று அல்லது கல்முனைக்கு வரவேண்டிய நிலை உள்ளது.

### வயலில் வேலைசெய்த விவசாயிகளை கொன்றனர்

இப்படி சகல இயற்கை வசதிகள் இருந்தும் செழுமையுடன் வாழ்வதற்கு வழி இல்லாமல் வறுமையில் செம்மையாக வாழ்ந்துவந்த எங்கள் வாழ்வில் குறுக்கிட்டது காக்கி உடையில் வந்த அரசகாவற்படையினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள். இந்த அரச

(5-ம் பக். பார்க்க)

எங்கள் மீது துப்பாக்கி சன்னங்களையும், பாரிய குண்டுகளையும் பொழிந்து எமது அருமைத்தோழர்களை-தலை சிறந்த வீரர்களை, வீழ்த்திக்கொண்டிருக்கும் எதிரி எம்முன்னே முழுப்பலத்துடன் உயர்ந்து நிற்கிறான். எதேச்சாதிகாரமான அரசுக்கு எதிராகப் போராடுவதும், அரசியல் சுதந்திரம் பெறவேண்டியதுமே இன்று எமக்கு முன்னுள்ள முக்கிய பணியாகும்.

இத்தகையதொரு போராட்டத்தில் தியாக உணர்வுடனும் நேர்மையான அர்ப்பணிப்போடும் போராளிகள் தமது கரங்களை இறுகப்பிணைத்துக் கொள்ளவேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர். அவ்வாறு இறுகப்பிணைந்த போராளிகளின் உறுக்கையொத்த பலத்தினால் எதிரிகள் விரட்டப்படவேண்டும். எமது மண் மீட்கப்படவேண்டும். வாழ்வில் வசந்தம் வீசவேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டோராய் மக்கள் வாழுகின்றனர்.

ஆனால் நமது கருத்துப்படி ஒரு நெருக்கடியான நிலைக்குள் படிப்படியாக தள்ளப்பட்டுவருகின்றோம் என்பதை வருத்தத்துடன் தெரியப்படுத்த வேண்டும். இந்த நெருக்கடிக்கு மூன்று காரணிகளை குறிப்பிட்டு கூறமுடியும். முதலாவதாக ஈழத்தின் தென்பகுதியில் அதாவது திரியாய், திருமலை, மூதூர், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளில் அரச இராணுவத்தின் அதிகரித்த செயல்பாடுகளும் அடாவடித்தனங்களும். அன்றாடம் காய்ச்சி அனாதைகளாக வாழ்வு குலைக்கப்பட்டு காடுகளிலும், மலைகளிலும். ஒழிந்துகொள்கின்ற மக்களின் நிலை, தினசரி நடக்கும் கொலைகளாலும், சித்திரவதைகளாலும் உள்ளம், உடல் உடமை, இழப்புக்களான போதிலும் மண்ணைக்காப்பதற்காக போராடிவரும் தரம்.

இரண்டாவதாக கபடத்தனமாக அரசு மேற்கொளும் பேச்சுவார்த்தை என்னும் மாயைகளில் சிக்கி இடைக்காலத் தீர்வு கிடைக்கப்போவதாக எண்ணுகின்றபோக்கு அரசு தன்பிடியில் இருந்து தளர்ந்துவருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் பேரம்பேசி ஆகக்கூடுதலானதைப் பெற்றுக் கொண்டு விடுதல் வேண்டும் என மிதவாதிகள் துடிக்கின்றார்கள். இப்படியான சமாதான தீர்வின் பின் இன்றைய போராளிகளை எப்படிச் சமூக வாழ்க்கை ஓட்டத்துடன் இணைப்பது என்றும் இவர்கள் அளவுக்கதிகமாகவே கவலைப்படுகின்றார்கள் இந்தப் போக்கின் விளைவால ஏற்படுகின்ற சிக்கல்கள்.

மூன்றாவதாக போராளிகள் மத்தியிலே காணப்படுகின்ற சலிப்பு - களைப்பு. இந்த அம்சம் குறித்து நுணுகி ஆராய வேண்டியுள்ளது. எந்தவிதமான சுயலாபத்தையும் கருதாமல். தம் சொந்த எதிர்காலத்தைப் பணயமாக்கி, உயிரையும் இழக்க திடங்கொண்டுள்ள போராளிகள் மத்தியில்

(5-ம் பக், பார்க்க,)

"நமது கட்சி ஒரு மகத்தான கட்சி. புகழ்மிக்க கட்சி. பிசகற்ற கட்சி. இது அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒரு உண்மை. ஆனாலும் நம்மிடம் இன்னும் குறைபாடுகள் உண்டு. இதுவும் அங்கீகரிக்கப்பட வேண்டிய உண்மையாகும். நாம் எல்லாவற்றையும் அங்கீகரிக்கக்கூடாது. சரியானவற்றை மாத்திரம் அங்கீகரிக்கவேண்டும். அதேபோல் எல்லாவற்றையும் நிராகரிக்கக்கூடாது. தவறானவற்றை மாத்திரம் நிராகரிக்கவேண்டும். நமது வேலையில் முக்கியமான அம்சம் நமது சாதனைகள். ஆனால் அதில் இன்னும் பல குறைகளும் தவறுகளும் இருக்கத்தான் செய்கின்றன. எனவேதான் நாம் ஒரு சீர்செய் இயக்கத்தை நடத்தவேண்டியிருக்கிறது. நமது சொந்த மானசீகவாதம், அதிகாரத்துவம், கோஷ்டிவாதம் ஆகியவற்றை நாம் விமர்சனம் செய்தால் நமது கட்சியின் புகழுக்கு மாசு ஏற்படுமா? இல்லை என்று நான் எண்ணுகிறேன்."

மாவோ சேதுங

(பிரச்சார வேலை பற்றிய தேசிய மாநாட்டுரையில்)



## எங்கள் கிராம....

(4-ம் பக்கத் தொடர்)

படைகளின் அட்டகாசங்களால் தினம், தினம் எங்கள் உடமைகள் எரிக்கப்படுகிறது. உயிர்கள் பறிக்கப்படுகிறது.

### கடந்த பெப்ரவரி மாத பிறபகுதியில்

எங்கள் பக்கத்து வயல்வெளியாகிய 'உடும்பன் குளத்தில் அரசினால் அனுமதிக்கப்பட்ட ஆசனமற்ற படையினர் நூற்றுக்கணக்கானோர் அந்த வயலைச் சுற்றி வளைத்து அங்கு தமது கடமையில் கண்ணுயிருந்த ஒன்றும் அறியாத அப்பாவி விவசாயிகள் 101 பேரை துப்பாக்கிமுனையில் ஒன்றுசேர்த்து (இவர்களுள் பெண்கள், சிறுவர்கள், 'குறவர்' எனப்படும ஆதிவாசிகளும் அடங்குவர்) இதில் இருந்த பெண்களை காட்டினுள் அழைத்துச் சென்று மானபங்கப்படுத்தி, மீதி ஒரு சிலரை வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு எஞ்சியிருந்த சுமார் 101 பேரின் கைகால்களை வேளாண்மை கட்டும் கயிறுகளால் கட்டி அரிவாள், கோடரி, கத்தி போன்ற ஆயுதங்களால் அவர்களது கை கால் கழுத்து போன்றவற்றை வெட்டி, கொத்தி, குதறி அனைவரையும் அங்கு குறையாக இருந்த (சூடு) அறுவடை செய்த வேளாண்மை குவியலினுள் போட்டு அவர்கள் மேல் மிகுதியாயிருந்த வேளாண்மைக் கட்டு, வைக்கோல் போன்றவற்றைக் குவித்து தீயிட்டு கொழுத்தி எரித்த சம்பவம், நாகரீகம் கொண்ட மனிதகுலத்தையே அதிரவைத்தது. இதை தொடர்ந்து எமது கிராமத்திற்கு அடிக்கடிவரும் அரச அக்கிரமக்காரர்கள் எங்களை கொல்வதும், எரிப்பதும் சர்வசாதாரணமாகிவிட்டது. அண்மையிலும் உடும்பன் குளத்தின் பக்கம் சுற்றிவளைத்த ராணுவத்தினர் அங்கிருந்த 10 க்குமேற்பட்ட விவசாயிகளை கொன்று ஒழித்தும் தொடர்ந்து அப்பகுதியில அரச அட்டகாசங்கள் நடப்பது ஆராயப்படவேண்டியதொன்றே

### அரசின் திட்டமிட்ட சூழ்ச்சியும் எமது நிலைப்பாடும்

எங்கள் கிராமத்திலும் சூழவுள்ள வயற்பரப்பிலும், அரச கூலிப் படைகளால் நடத்தப்படும் அட்டூழியங்களையும் இன்றைய அரசியல் சூழலையும் ஒப்பிட்டு நோக்கும்போது எங்கள் பகுதி அம்பாறை மாவட்டத்தில் இயற்கைவளம் படைத்த நிலமாக இருக்கின்றமையாலும். இப்பகுதியில் மேற்கொண்டுள்ள 'கஞ்சிகுடியாறு' அபிவிருத்தியினால் இப்பகுதி நிலங்கள் மேலும் செழுமை பெற்று பொன்விளையும் பூமியாக மாற்றமடைவதுண்மை. என்பதையறிந்த இந்த இன ஒழிப்பு சோவனிச அரசு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான இப்பகுதிகளை ஆக்கிரமித்து சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. இப்பகுதியில் காலம் காலமாக விவசாயத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் பேசும் மக்களை இம்சித்து துன்பப்படுத்தி விரட்டி அவ்விடங்களில் சிங்களவரை குடியேற்றும் திட்டத்துடனேயே அடிக்கடி இப்பகுதிகளில் இராணுவத்தினரின் அட்டகாசம் அரசின் ஏவல்படி நடந்து வருகிறது என்பதை நாங்கள் தெளிவாக உணரக்கூடியதாக இருக்கிறது. அரச படைகளின் இந்த அடாவடித்தனங்களால் இப்பகுதியில் இன்று விவசாயம் செய்வதற்கே விவசாயிகள் அஞ்சி தாங்கள் உழைத்து வளம்படுத்திய இடங்களைவிட்டு கண்ணீர் சிந்தி கரையேறும் காட்சி கொடுமையானது. இவற்றை யெல்லாம் உற்று நோக்கும் போது வெறும் சலுகைகள் உரிமைகள் வேண்டிப்போராடுவதால் எங்கள் துன்பங்களும், துயரங்களும் எங்களை விட்டு நீங்கப்போவதில்லை. உண்மையான ஓர் உடமைப்போராட்டம் நடத்தி எங்கள் உடமைகளை எங்களுக்கே சொந்தமாக்கி உழைப்பவனுக்கே உண்பதற்கும் உரிமையுண்டு என்னும் நிலையை உருவாக்குவதன் மூலமே எங்களை சூழவுள்ள அரசியல், பொருளாதார, சமூக அடக்குமுறைகள் சகலவற்றிலிருந்தும் நீங்கி ஒரு சமத்துவ வாழ்வுக்கு வழிகாணலாம் என்பதை உறுதியுடன் நம்பி நிற்கின்றோம்.

## யாவரும் கேளீ....

(4-ம் பக்கத் தொடர்)

சோர்வு ஏற்படுவதை கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது. இத்தகைய சோர்வின் அடிப்படையை ஆராய்ந்து தெளிவுபடுத்துதல் மூலமே இறுக்கமான கட்டுக்கோப்பினை இயக்கத்துள் பேணுதல் சாத்தியமாகும். போராளிகளுக்கிடையில் - இயக்கத் தோழர்களுக்கு இடையில ஏற்படுகின்ற சிக்கல்களை பொதுவாக மூன்று வகைப்படுத்தலாம். அவையாவன

1) உணர்ச்சி வேகத்தினாலும், ஆயுதங்களைப்பார்ப்பதில் பிரியப்பட்டும் இணைந்தவர்களினால், நீண்டகாலத்திற்கு நிலைக்கமுடியாத தன்மை.

2) இயக்கங்களுக்கிடையிலும், இயக்கத்துக்குள்ளும் ஏற்படுகின்ற முரண்பாடு மோதலாக வெடிக்கின்ற சூழ்நிலையினால் போராட்டப் போக்கில் தோன்றும் அதிருப்தி.

3) சொந்தப்பிரச்சினைகளால் தத்தம் தனிப்பட்ட எதிர்காலத்தை வளப்படுத்த முனையும் போக்கு எனக்குறிப்பிடமுடியும். இனி இவை ஒவ்வொன்றையும் தனியாகப் பார்ப்பது நன்மைபயக்கும் எனலாம்.

முதலாவதில்; குறிப்பாக யூலை 83 இல் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவால் உந்தப்பட்டு இணைந்து கொண்டவர்கள். நேரடியாக தாக்குதல்களுக்கு இலக்கானதாலோ அல்லது மறைமுகமாக பாதிக்கப்பட்டதாலோ இணைந்து கொண்ட இத்தகைய நபர்களிடம் உணர்ச்சி மேலீடும், எதிரிகளை பழிவாங்கும் மனோபாவமும் தான் நிறைந்து காணப்பட்டது. இயக்கப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவினால் தனித்தனி ஒவ்வொருவரையும் இனம்பிரித்து வேறுபடுத்திப் பார்ப்பதில ஏற்பட்ட இடைவெளிகளுள் இணைந்து கொண்ட இத்தகையோர் காலப்போக்கில வேகம் குறைந்து ஒதுங்கிச்செல்ல முனைவதைக்காணலாம். தாங்கள் ஒதுங்கிச்செல்லவேண்டும் என்பதையே முதன்மைப்படுத்தும் இவர்கள் இதற்காகவே அமைப்பின் மீதும் அமைப்பின் தோழர்களின் நடவடிக்கைகளின் மீதும் சதா குற்றம் காண்பதையே இலக்காகக் கொள்கின்றனர். தத்தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றாமல் காலத்தை கடத்துவதையும், ஏற்படுகின்ற நிர்வாகரீதியான சிக்கல்களை பெரிதுபடுத்தி தோழர்களின் தொழில்பாடுகளுக்கு தடங்கலாக இருப்பதையும் இவர்கள் கொண்டிருப்பதை பரவலாக காணலாம்.

இரண்டாவதாக; அமைப்பின் முன்னனித் தோழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய அணுகு முறை மாறுபாடுகள், ஆளுமைகள் என்பவற்றில் வேறுபாடு காண்பதினால் ஏற்படுகின்ற சிக்கல்களாலும், வெவ்வேறு அமைப்புகளுக்கு இடையில் மூழுகின்ற பகைமை. மோதலாக வெடித்து தீர்த்துக்கட்டுவது என்பது வரை செல்லும்போது தோன்றுகின்ற விரக்தியாலும், போராட்டப் போக்கில் ஒரு நம்பிக்கையீனமும் அதிருப்தியும் பிறக்க வழிசமைக்கப்படுகிறது. சுருங்கச் சொன்னால் அமைப்பின பொறுப்பான சில தோழர்களின நடவடிக்கையால பாதிக்கப்படும்போது அதையே அமைப்பு முழுமைக்கும பொதுவாக்கிப்பார்ப்பதும். இணைந்து வேலைசெய்கின்ற அமைப்பின்மீது ஏற்படும் அதிருப்தியை, இலட்சியம முழுமைக்கும் பொதுவாக்கிப்பார்ப்பது மான போக்கு, இது தவறான தொன்றாகும். உணர்வு பூர்வமாக சாதாரணமக்களின் பால்கொண்ட பாசமும், இந்த மண்ணின் விடுதலைக்கான அர்ப்பணிப்பும் மிக்க தோழர்கள் இந்தத் தவறை இழைக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

மூன்றாவதாக; இளைஞர்களாக அமைப்புடன் இணைந்து வேலை செய்ய ஆரம்பித்தது தொடர்ந்து நீண்டகாலமாக போராட்டப்போக்குடன் பின்னிப்பிணைந்து வேலை செய்யும் தோழர்களுக்கு அமைப்பு நடைமுறைகளுடனே உடல், உளரீதியாக ஏற்படுகின்ற தாக்கங்களும் பாதிப்புகளும், இதன் காரணமாக தத்தம் சொந்த எதிர்காலத்தை மட்டும் முன்னிலைப்படுத்திப்பார்ப்பது, அமைப்பில் இருந்து தூரவிலகிச்செல்லும் போக்கு. இவ்வாறான போக்குகளினால் அமைப்பிலிருந்து தூரவிலகிச் செல்பவர்களை கட்டுப்படுத்தவேண்டி அமைப்பை இறுக்கமானதாக வரையறுப்பது அவசியமானதாகும். அமைப்பின் ஒவ்வொரு தோழரும், ஏன் ஒவ்வொரு போராளியும் கூட இன்றை சிக்கல்களையும், இச்சிக்கல்களின் அடிப்படையையும் புரிந்து தெளிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் வரலாற்றில் தத்தம் பாத்திரத்தைச் செவ்வனே ஆற்றுதல் சாத்தியமானதாகும்.

இந்த வகையில் தோழர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களைப் புரியவைப்பதில் சுயவிமர்சனங்களை முதன்மைப்படுத்தவேண்டும். சுயநலவரம்புகளை மீறமுடியாமல் பொதுமக்களிடம் இருந்தும் போராட்டப்போக்கிலிருந்தும் பிரிந்துபோக விரும்புபவர்களை அன்னியப்பட்டுப் போகவிரும்புபவர்களைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அமைப்பின் வேலைகளில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவர்கள் ஏதோ சில குறைபாடுகளினால் ஒதுங்கிசெல்ல முனைவதை கட்டுப்படுத்தவேண்டும். தோழர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனமானது நியாயம் நிறைந்ததாகவும் ஆராய்வுடன நிலைமைகளை விளக்குவதாகவும். நம்பிக்கை ஊட்டுவதாகவும் இருக்கவேண்டும். அதில்லாமல் கரடுமுரடான தும அதிகாரத்துவம் உடையதாகவும் கட்டுப்பெட்டித்தனமாகவும், வரட்டுவாதமாகவும் இருக்கக்கூடாது. அப்படி இருக்குமாயின தோழர்கள் தூரவிலகிச்செல்வதை ஊக்கிவிப்பதாகவே போய்விடும். இது தவறானது.

எனவே விமர்சனம் செய்யப்படுவதில் நமக்கு இருக்கவேண்டிய நோக்கம், வைத்தியர் ஒருவர் நோய்க்கு சிகிச்சை அளிப்பதுபோல இருக்கவேண்டும். ஆதாவது, நோயாளியைக் காப்பாற்றுவதேயன்றி அவர் இறப்பதற்கு சிகிச்சை அளிப்பதல்ல. அனைத்து சிகிச்சை முறைகளும் நோயாளியைக் குணப்படுத்துவதையே உறுதி செய்யவேண்டும். உண்மையாகவும், விசுவாசமாகவும் உழைக்கும் தோழர்களிடம் அவர்களுடைய சித்தாந்த அல்லது அரசியல் நோயைக்குணப்படுத்துவதில் கடினமாகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்ளக்கூடாது. அப்படி நடக்குமாயின் நாம் எமது நோக்கத்தில் வெற்றி பெறுவது இடலாததாகிவிடும்.

## ஈழப்போரா.... (ஆய்வு)

(3-ம் பக்கத் தொடர்)

ணுவத்தினர் முறைகேடாக நடக்க முற்பட்டபோது நிராயுதபாணிகளாக நின்ற அம்மக்கள் இராணுவத்துடன் மோதினர். இறுதியல் அரசாங்கம் அப்பகுதியிலிருந்து இராணுவ முகாமை வாபஸ் பெற வேண்டியிருந்தது.

இத்தகைய நிகழ்வுகள் யாவும் ஈழப் போராட்டத்துடன் இஸ்லாமிய மக்கள் தம்மை இறுகப் பிணைத்துக்கொள்ள வேண்டிய தேவையினையும், அதற்காதாரமான யதார்த்த நிலைமைகளையும் வெளிக்காட்டுகின்றன.

### எதிர்காலமென்ன?!

ஈழம் என்பது தற்செயலானது அல்ல, இயங்கியல்ரீதியில் நிதர்சனமானது. ஈழவிடுதலைப்பாதையில் முன்னேறுகிய தான அடிகள் எடுத்து வைக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில இஸ்லாமிய தலைவர்கள் விழிப்படைந்துள்ளனர். கொழும்பு சார்வர்த்தகத் தலைமை தாமே இஸ்லாமியரின் ஏக தலைமைத்துவம் என்று கூறிக்கொள்ள, இஸ்லாமியருக்கென தனியான தலைமைத்துவம் தேவை என இன்னுமொரு சாராரும் கூறிக்கொள்கின்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது இஸ்லாமிய மக்கள் தமிழ்பேசும் மக்கள் என்ற அடிப்படையில் சிங்கள பேரினவாத அரசினால் அடக்கி ஒடுக்கப்பட்ட போதெல்லாம் அரசாங்கத்திற்கு துணைநின்ற இவ்வாறானவர்கள், இன்று இஸ்லாமிய மக்களின பிரதிநிதிகளாக தம்மைத் தாமே வரிந்து கொள்வது வேடிக்கைக்குரியமத

எந்த ஒரு காரணங் கொண்டும இஸ்லாமிய மக்கள் இத்தீவில் பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியின கீழ் தமது விமோசனத்தை அடைய முடியாதென்பதை கடந்த கால அனுபவங்கள் நிரூபித்துள்ளன. எனவே இந்த அரசிடம் ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசியற் தீர்வுகளில் இஸ்லாமியர்களின உரிமைகளை பெற்றுத் தருவதாகக் கூறுக்கொள்ளும பூர்ஷவாத தலைமைகளின நிலைப்பாடு, தமது எண்ணங்களை அடைய இஸ்லாமிய மக்களின இறைமையைத் தாரைவார்த்தேனும் ஈடேற்றிக் கொள்ள முனைவதையே காட்டுகிறது.

இஸ்லாமிய மக்களுக்கெதிரான அடக்குமுறைகளின அடிப்படைக் காரணங்களையும் பூகோள, வரலாற்று ரீதியான பிணைப்பையும் கருத்திற்கொண்டே, தீர்வுக்கான போராட்டத்தை முன்னெடுத்தல் அவசியமானது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது இங்கே அதிகாரத்தில் இருக்கும் முதலாளித்துவ அரசு மட்டுமல்ல இவர்களின் தலைமைக்காக கங்கணம் கட்டிநிற்கும் தலை நகசர்ரார்வர்த்தக பிரமுகர்கள் உட்பட அரசின் அனுசரணையுடன் அதிகாரங்களை நாடி நிற்கும் தலைமைகளும் தூக்கி எறியப்படவேண்டியவையாகும்.

### இஸ்லாமியரும் ஈரோஸின் நிலைப்பாடும

1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆந் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட ஈரோஸ் பிரகடனத்தில்

மதத்தால் இந்துவானாலும்
மாண்பில் முஸ்லீம் என்றாலும்
வேதம் பயிலும் கிறீஸ்தவனும்
தீரச் சைவன் ஆனாலும்
ஈழத்தமிழர் ஈழவரே
அவர் எங்கிருந்தாலும் நம்மவரே
எந்த வனத்தில் வாழ்ந்தாலும்
ஈழத்தமிழர் ஓரினமாம்

என்று இடித்துரைக்கப்பட்டது இந்த அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளை இயங்கியல் ரீதியில் இனங்கண்டு ''நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம் நாடு ஈழம்'' என்ற கோஷத்தை ஈரோஸ் முன்வைத்துள்ளது.

அரசியல் சாசன ரீதியில் தமிழ் பேசும் மக்களின் அரசி

(6-ம் பக். பார்க்க.)

# பொதுமை

தொடருகின்ற பேச்சுவார்த்தைகள் மூலம் சாத்தியமான ஒரு முடிவு எய்தப்படும் என்றும், போராளிகள் மீது இந்தியா நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்துத் தீர்வு ஒன்று திணிக்கப்படும் என்றும், இத் தீர்வானது மாவட்ட, மாகாண சபைகளுக்கு மேற்பட்டதாக இருக்கமுடியாது என்றும் பொதுவாகப் பேசப்படுகிறது.

ஆனால், இந்திய நலன்களை இலங்கை காப்பாற்றும் என்னும் உறுதி எய்தப்படும்வரை பேச்சு வார்த்தைகள் தொடரவே செய்யும் எனலாம். இந்துமாக்கடல் பகுதியின் வல்லரசுப் போட்டி, இந்தியாவின் பாதுகாப்புச் சிக்கல்கள் என்பவற்றோடு ஈழப்போராட்டம் பின்னப்பட்டுள்ளது. என்பதை சோவியத் தலைவர் கொர்பச்சேவின் அண்மைய பேச்சு அழுத்தமாகத் தொட்டுக்காட்டுகிறது. திருமலைத் துறைமுகத்தில் இந்திய நலன்கள் பேணப்படாதவரை, இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் செயலிழக்கச் செய்யப்படும்வரை, இந்தியா ஈழப்போராளிகள் மீது பெருத்த நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கும் என எதிர்பார்ப்பது பொருத்தமற்றதாகவே இருக்கும்.

எப்படியாயினும், தீர்வு திணிக்கப்படுவதும், போராட்டத்தைத் தொடர்வதும், ஈழவிடுதலையை எய்துவதும் ஈழத்தில் வாழும் மக்களினுடைய பங்களிப்பிலும் ஆதரவிலுமே தங்கியுள்ளது. போராடிக்கொண்டிருக்கும் அமைப்புகள் தங்களுக்கிடையில் இத்தகைய பாரிய பொதுவான விடயங்களிலாவது ஒருமித்த கருத்துக்களைப் பிரதிபலிக்காதவிடத்து அனைவரும் சிறிலங்காவின் நோக்கத்திற்கு பலியாக நேரலாம்.

இன்று எமக்கு முன்னுள்ள பாரிய பிரச்சனை பாதுகாப்புப் பிரச்சனையே ஆகும். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சிறிலங்காவின் பௌத்த சிங்கள இனவாதத்தால் வெறியூட்டப்பட்ட இராணுவத்தை எந்தவகையிலும் நம்புவது பொருத்தமற்றதாகவே இருக்கும். எனவே எங்கெங்கோ சுற்றிச்சுற்றி பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தாலும் எமது பலத்தை இழக்க வைக்கக்கூடிய எந்த முடிவையும் எந்த சக்தியும் மேற்கொள்வது மக்களுக்கு செய்யக்கூடிய துரோகச் செயலாகவே அமையும்.

## இராணுவச்......

(1ம் பக்கத் தொடர்)

இனப் பிரச்சினைத்தீர்வுக்கு தம் நல்லெண்ண முயற்சிகளைத் தூண்டிவரும் சக்திகளும் கூட தமது முயற்சிக்கு தடைக்கல்லாக ஜே ஆர் இருக்கின்றார் என எண்ணினால் ஜே ஆர் அரசாங்கம் உலக அபிப்பிராயத்தின் கீழ்படிய மறுத்தால் பூத்தரப்பிலிருந்தும் ஒரு சதிக் கவிழ்ப்பு ஊக்குவிக்கப்படலாம்.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையிலும் இந்து சமுத்திரப் பகுதியிலும் அமெரிக்க நலன்களுக்கு உறுதி அளிப்பவராக ஜே ஆர் நீடிக்கும் வரை இராணுவச்சதி வெற்றி பெறுவது ஆர்லபமே. ஜே. ஆரும் தன் சகாக்களுக்கு இடையில் நடைபெறும் இந்த பதவிப்போட்டிகளை முற்றாக நீக்குவதற்கு தமிழ்பேசும் மக்களின் நல்லெண்ணத்தை பெறும் முயற்சியாகவே பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து வருகின்றார்.

ஆனால் அமெரிக்கா ஈரானில் ஷாவையும், பிலிப்பைன்ஸில் மாக்கோஸையும், நிக்கரக்குவாவில் சோமோசாவையும் கைவிட்டதுபோல ஜே ஆரையும் கைவிடுமானால் அவரது சகாப்தம் அத்துடன் நிறைவெய்தும். அதுவரையில் இராணுவ சதிப்புரட்சி பற்றிய எண்ணங்கள் இருந்தாலும் வெற்றி பெறுவதில் பலதடைகளை எதிர்நோக்கவேண்டியே இருக்கும்.

## ஈழப்போரா....(ஆய்வு)

(5-ம் பக்கத் தொடர்)

டல் உரிமைகளை வரையறுப்பதாலோ அல்லது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைக் கட்டுப்படுத்துவதனாலோ, அல்லது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலவும் மதவேறுபாடுகளை அடிப்படையாக வைத்து மூட்டி மோதிக்கொண்டு, தத்தமது அபிமானங்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு நிற்பதாலோ, தனித்து இஸ்லாமியர்களுக்காக ஒரு தலைமையை கட்டி எழுப்புவதனாலோ மட்டும் இஸ்லாமிய மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீரப்போவதில்லை. இவையனைத்திற்கும் அப்பாற்பட்டு அன்றாடம் தம் வாழ்க்கையை ஓட்டிக்கொள்ள முடியாமல் பொருளாதார உறவுகளும், சமுதாய முரண்பாடுகளும் தமிழ் பேசும் மக்களின் குரல்வளையை நெரித்துக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், இவற்றை உடைத்தெறிய வழிவகுக்க வேண்டியதே இவர்களின் நலனில் அக்கறை கொண்ட அணிகளின் தலையாய நோக்காக இருக்கமுடியும்.

## திருமலை நகரில் கண்ணிவெடி




திருமலை நகரில் ரோந்து நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் பேசும் மக்களுக்கு இடைஞ்சல் கொடுத்து பல சிரமங்களை ஏற்படுத்தி வரும் அரச படையினருக்கு எதிரான நிலக்கண்ணி வெடித்தாக்குதல் ஒன்று எம்மால் 29-08-86 அன்று திருக்கோணமலை உள் துறைமுக வீதியில் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல் நடாத்தப்பட்ட இடமானது, அதனைச் சூழவுள்ள 3 மைல் சுற்றுடலுக்குள் கடல், தரை, ஆகாய முப்படைகளினது பல முகாம்களினதும், பொலிஸ், ஊர்காவல்படை என்பனவற்றின் முகாம்களினதும் நெருக்கமாகச் சூழப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதலால் திருகோணமலை முழு நகரமுமே மிகப் பயங்கர அதிர்ச்சிக்குள்ளாகியது. இதில் நான்கு பொலிஸ், படையைச் சேர்ந்தவர்கள் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். பலர் படுகாயம் அடைந்துள்ளார்கள். காயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்காக அனுராதபுரம், கொழும்பு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

## மூதூர் நிலக்கண்ணி வெடி

மூதூர் பிராந்தியத்தை தனது அராஜக நடவடிக்கையால் சின்னாபின்னமாக்கியதுடன் தமிழ் பேசும் மக்களுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வரும் இராணுவத்தின் அண்மைக்கால கடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டும் முகமாக மூதூர் நகரின் பிரதான வீதியில் 31-09-86 அன்று நிலக்கண்ணி வெடித்தாக்குதல் ஒன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின் போது ஏழு இராணுவத்தினர் ஆபத்து விளைவிக்கக்கூடிய காயங்களுக்குள்ளானார்கள். இவர்கள் அவசர சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## யாழ் கோட்டைமுகாம் மீது தாக்குதல்

7-9-86 அன்று கோட்டை இராணுவ முகாமிலிருந்து இதுவரைகாலமும் ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களிலும் பார்க்க, படுமோசமான கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களை சிங்கள இராணுவத்தினர் மேற்கொண்டபோது அதனை முறியடிக்கும் வகையிலும், பலத்த பதிலடி கொடுக்கும் முகமாகவும் நாம் முதன் முதலாக கூட்டாக சிங்கள இராணுவத்துக்கெதிராக கோட்டையைச் சுற்றிய பலமுனைகளிலும் இருந்து கடுமையான ஷெல் தாக்குதலை மேற்கொண்டோம்.

கோட்டை மீது இதுவரையும் ஏவப்பட்ட ஷெல்களிலும் பார்க்க அதிசக்தி வாய்ந்த R.K. 155 ரக மோட்டார் ஷெல்களும் கொமாண்டோ மோட்டார் 82 mm. ரக மோட்டார் ஷெல்களும் முதன் முறையாக எம்மால் சரமாரியாக ஏவப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் முழுவதுமான சளைக்காத எதாத ஷெல்களில் சகல தோழமை இயக்கங்களும் பங்கேற்றுச் செயல்பட்டனர். இத்தொடர்ச்சியான தாக்குதல்களினால் ஒன்பது அரச படையினர் கொல்லப்பட்டும், பலர் காயமுற்றும் கோட்டையின் உள் கட்டுகள் பலத்த சேதமடைந்தும் உள்ளதாக அறியவந்துள்ளது.

## ஈழவர் எழுச்சி தினம்

ஈழவர் முன்னணியினால் கன்னாகம், மயிலணியில் 22-0?-86 அன்றும், கரவெட்டியில் 30-08-86 அன்றும் ஈழவர் எழுச்சிதின நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இத்தினத்து நிகழ்ச்சிகளை அடுத்து வந்த ஈழவர்களில் ஏராளமானோர் பங்குகொண்டு சிறப்பிக்கவும், பார்க்கவும் வாய்ப்பாக இருந்தது. வேறு வேறு ஊர்களைச் சேர்ந்த ஈழவர் முன்னணிப் பிரமுகர்களும், கலைஞர்களும் இந் நிகழ்ச்சிகளிற் பங்கெடுத்துச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. பகல் நிகழ்ச்சிகளில் பெய்வல்துறைப் போட்டிகளும், இரவு நிகழ்ச்சிகளின் போது கலையம்சம் பொருந்திய மேடை நிகழ்வுகளும் இடம் பெற்றன. மொத்தத்தில் அந்தினங்களில் இடம்பெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் மக்களை, மண் மீது பற்றுக்கொள்ளச் செய்யும் தன்மையும், சமூக அரசியல், பொருளாதார ரீதியில் உணர்வூட்டும் தன்மையும் பொருந்தியிருந்தமையை கண்டு குறிப்பிடலாம்.




15-04-86 அன்று: வழிப்பயணத்தின்போது மாற்று இயக்கமொன்றின் தவறுதலான துப்பாக்கிப் பிரயோகத்தினால் சாவகச்சேரியைச் சேர்ந்த தோழர் உதயன் இன்னுயிர் இழக்க நேரிட்டது.

12-06-86 அன்று: ஈச்சிலம்பற்றையைச் சேர்ந்த தோழர் முரளி அகதிகளுக்கு நிவாரணம் பெற்று வரும்போது வழியில் மறித்த சிங்கள ஊர்காவற் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் இன்னுயிர் ஈந்தார். சேவை மனப்பான்மை உடைய இவர் ஈழவர்களுக்கு அரிய பல சேவைகள் செய்துள்ளார். மூதூர் தெற்கு தொகுதிக் குழு செயலாளராகவும் செயற்பட்டார்.

11-07-86 அன்று, கடற்பயணத்தின்போது அரசபடையினரின் தாக்குதலுக்குள்ளாகி தோழர் நியாஸ் தன்னுயிர் ஈந்தார். இவர் கடற்போக்குவரத்துப் பணியில் ஆற்றல்மிக்க போராளி என்பது குறிப்பிடத்தக்கது.

16-07-86 அன்று: பெருவெளி, மணற்சேனை கிராமங்களில் நரவேட்டையாடிய அரச இராணுவத்தின் கோரச்செயலால் மல்லிகைத்தீவைச்சேர்ந்த தோழர் இராசநாயகம் தன்னுயிர் ஈந்தார்.

பயிற்சி முகாமில் நோய்வாய்ப்பட்டிருந்த, மலையகத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் மாயா 24-07-86 அன்று இன்னுயிர் ஈந்தார். துணிச்சலும், திறமும் மிக்க இவர் 83 ஜூலை கலவரத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

25-07-86 அன்று, ஜூலை எதிர்ப்புநாள் சுவரொட்டி ஒட்டும்போது மன்னாரைச் சேர்ந்த தோழர் அசோக், மன்னாரிலும் மூதூரைச் சேர்ந்த தோழர் சஜன் மூதூரிலும் அரச இராணுவத்தினரால் சுடப்பட்டு இன்னுயிர் ஈந்தனர். இவர்கள் இராணுவத்துறையில் மிகுந்த ஆர்வம் உடையவர்கள். தோழர் சஜன் மூதூர் பிராந்தியக் குழு உறுப்பினராகப் பணியாற்றினார்.

தோழர் மோகன்ராஜ் மின்சார விபத்தில் தன்னுயிர் ஈந்தார். இவர் Guys உடன் மிகவும் ஈடுபாடு கொண்டு செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.